STC.No. 862/2024
நாள் 09.01.2026.
P.W.1 – (சிவராஜ் )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் ஜவுளி தொழில் சொந்தமாக வைத்துள்ளேன். நான் இளங்கோ ஜவுளி ஸ்டோர் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். என் அப்பாவும் நானும் அந்த கடையை நடத்தி வருகிறோம். எதிரியின் சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக எதிரி எனக்கு பழக்கம். எதிரி சதுரகிரி வரும் சமயம் எங்கள் கடையில் துணி எடுக்கும் வகையில் பழக்கம். சராசரியாக ஒரு ஆண்டிற்கு எதிரி எங்கள் கடையில் எவ்வளவு கொள்முதல் செய்திருப்பார் என்றால் கொள்முதல் செய்யும் போது ரூ.10,000/– முதல் ரூ.20,000/– வரை கொள்முதல் செய்திருப்பார். என்னுடன் பழகிய 10 ஆண்டுகளில் எந்த ஒரு சமயமும் ரூ.1 லட்சம் அல்லது அதற்கு மேல் கொண்ட தொகைக்கு எதிரி எங்கள் கடையில் கொள்முதல் செய்யவில்லை என்றால் சரி. நான் ஜவுளி வியாபாரம் செய்து வருவதாக சொல்வதற்கு இந்த நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஜவுளி வியாபாரம் செய்வது தொடர்பாக வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் ஆம், தாக்கல் செய்கிறேன். வருமான வரி ஆவணம் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்இல்லை.

என் வியாபார Tin No. குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஞாபகத்தில் இல்லை. எனக்கு ஜவுளி வியாபாரம் தவிர வேறு தொழில் என்றால் வேறு தொழில் இல்லை. என் முழு வாழ்வாதாரம் ஜவுளி தொழில் என்றால் ஆம். நான் எதிரக்கு பணம் கொடுத்ததாக சொல்வதற்கு எதிரி என்னிடம் என்று பணம் கேட்டார் என்றால் 25.08.2021 அன்று பணம் கேட்டார், நான் 30.08.2021 அன்று பணம் கொடுத்தேன். எதிரி பணத்தை என் கடையில் வைத்து கேட்டார். எதிரி மட்டும் என் கடைக்கு வந்து பணம் கேட்டார். எதிரி பொதுவாக என்னை பார்க்க வரும் சமயம் காரில் வருவார் என்றால் சரி. அவர் கடன் கேட்டு வந்ததாக சொல்லும் அந்த சமயம் ஒட்டுநர் யாரும் உடன் வரவில்லையா என்றால் ஆம், உடன் வரவில்லை. நான் எதிரி பணம் கேட்ட சமயம் எவ்வளவு நாட்களில் பணத்தை அவருக்கு தருவதாக சொன்னேன் என்றால் நான் 2,3 நாட்களில் பணத்தை தயார் செய்து தருவதாக சொன்னேன். 30ம் தேதி பணத்தை கொடுத்தேன்.

25.08.2021 அன்று எதிரி என்னிடம் பணம் கேட்ட சமயம் என் கைவசம் ரூ.15 லட்சம் பணம் இல்லை என்றாலும் நான் பணத்தை தயார் செய்து தான் தருவதாக சொன்னேன் என்றால் சரி. நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணத்தை யார் யாரிடம் இருந்து பெற்றேன் என்றால் நான் என் ஜவுளி வியாபாரத்தில் சேமித்து வைத்திருந்த பணம் மற்றும் எதிரி கேட்டபின், நான் ஜவுளி கொள்முதல் செய்வதை நிறுத்தி அந்த தொகையும் சேர்த்து எதிரிக்கு கொடுத்தேன். நான் ஜவுளி வியாபாரத்திற்காக பணம் வைத்திருந்ததாக சொல்வது வங்கியில் இருந்த பணமா என்றால் இல்லை, என் கையிருப்பு பணம். நான் வழக்கில் எதிரி என்னிடம் பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன். என்ன தேவை என்றால் எதிரி அதனை என்னிடம்

சொல்லவில்லை, அவசர தேவை என தெரிவித்தார். 30.08.2021 அன்றே எதிரி பூர்த்தி செய்த 2 காசோலைகளை என்னிடம் கொடுத்தார். காசோலைகளை நான் வாசித்து பார்த்துதான் வாங்கினேனா என்றால் ஆம், அதில் உள்ள விபரங்களை எதிரிதான் எழுதினார். எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லும் 2 காசோலைகளை நான் இந்த வழக்கில் ஆவணங்களாக சேர்க்கவில்லை என்றால் ஆம். இந்த வழக்கானது எதிரி கடைசியாக கொடுத்த ரூ.2 லட்சத்திற்கு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. நான் பொதுவாக கொடுக்கும் பணத்திற்கு காசோலை எழுதி வாங்குவது வழக்கம் என்றால் சரி. நான் எதிரிக்கு ரூ.14 லட்சம் கொடுத்ததற்கு கொடுத்ததாக சொல்லும் தேதியில் ரூ.14 லட்சத்திற்கும் காசோலை எழுதி வாங்கவில்லை என்றால் சரி.

எதிரி 9 வது மாதத்தில் அவருக்கு பணம் வரும் என்றும் 9 ம் மாதம் தேதியிட்டு ஒரு காசோலை, பின்னர் 12 ம் மாதம் தேதியிட்டு மற்றொரு காசோலை என 2 காசோலைகளையும் பணம் வாங்கிய தேதியிலேயே கொடுத்திருந்தார். நான் பாக்கி ரூ.2 லட்சத்திற்கு ஏன் காசோலை வாங்கவில்லை என்றால் எதிரி முதலில் அந்த தொகையை கொடுத்துவிடுவதாகவும், பின்னர் ரூ.2 லட்சத்தை தருவதாகவும், சொன்னார். நான் தற்போது சொல்வது என் புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. எதிரி கொடுத்த 2 காசோலைகளும் திரும்பி விட்டதாகவும் எனக்கு தரவேண்டிய மொத்த தொகையும் தரவேண்டும் என கேட்டேனா என்றால் ஆம் கேட்டேன். 01.07.2024 அன்று நான் எதிரியின் வீட்டிற்கு நான் மட்டும் சென்று கேட்டேன். நான் எதிரி வீட்டிற்கு அன்றைய தேதியில் செல்லவில்லை என்றாலும் எதிரி எனக்கு ரூ.2 லட்சத்திற்கு காசோலை எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

ஏற்கனவே வாங்கிய கடனை தராத பட்சத்தில் எதிரி ரூ.2 லட்சத்திற்கு காசோலை கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த காசோலை பு.சா.ஆ.2 ஆகும். அந்த காசோலை எதிரி மற்றும் அவர் மனைவி பெயரில் உள்ள கூட்டு வங்கி கணக்கில் வழங்கப்பட்ட காசோலை என்றால் சரி. பு.சா.ஆ.2 காசோலையில் எதிரி கையொப்பமும் ஏனைய விபரங்களும் வெவ்வேறு பேனா மையால் உள்ளது என்றால் எல்லாம் ஒன்றாக தான் உள்ளது. பு.சா.ஆ.2 காசோலையில் தேதி மற்றும் அனைத்து விபரங்களும் இங்க் பேனாவால் எழுதியது போல் உள்ளது. நான் காசோலையை பெற்ற போது வங்கி கணக்கு இருவர் பெயரில் உள்ளதால் காசோலைக்கு யார் பொறுப்பு ஏற்றுக் கொள்வதாக கேட்டேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக நான் எதிரியின் மனைவி மீனாட்சிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி. நான் எதிரி மீது தேனி மாவட்டம் குற்றபிரிவில் மோசடி புகார் கொடுத்திருந்தேனா என்றால் இல்லை. நான் என் உறவினர் ராஜா என்பவர் மூலமாக புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் ஆம், கொடுக்கவில்லை.

நான் எதிரிக்கு எதிராக திருவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் பணம் வசூலுக்கு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அந்த வழக்கு ரூ.12 லட்சம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த வழக்கை இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள தலா ரூ.6 லட்சத்திற்கான 2 காசோலைகள் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. 2018 ம் ஆண்டு ஆளுங்கட்சியில் இருந்து அரசியல்வாதி எதிரி என்றால் சரி. நான் என் உறவினர் ஒருவருக்கு அரசு வேலை வேண்டி ரூ.12 லட்சம் கொடுத்திருந்தேன் என்றாலும் அதற்கு ஆதரவாக எதிரியின் காசோலைகள் 4 ஐ வாங்கி வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. திருவில்லிபுத்தூர்

கோவிந்தராஜ் மகன் ராஜா என் நண்பர். ராஜா எனக்கு ஒரு ஒப்பந்தம் பணம் வர கால தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது என்று எழுதிக் கொடுத்துள்ளாரா என்றால் ஆம். ராஜா எழுதிக் கொடுத்தது எதிரி தரவேண்டிய பணத்திற்காக என்றால் அது வேறு இது வேறு. ராஜா எழுதிக் கொடுத்த ஒப்பந்ததின் அசல் என்னிடம் உள்ளது என்றால் சரி. என்னிடம் காட்டப்படுவது அந்த ஒப்பந்தத்தின் நகல் என்றால் சரி. 16.03.2022 தேதியுடையது. அது **எ.சா.ஆ.1** ஆகும். எதிரி என்னிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் நானும் எதிரியும் கூட்டாக தொழில் பார்த்து வந்து எதிரி ஒரு செக்யுரிட்டிக்காக கொடுத்த காசோலையை நான் தவறாக பயன்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல.

நான் சொன்னதுபோல் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் ரூ.6 லட்சத்திற்கான தலா 2 காசோலைகள் திருப்பப்பட்டவுடன் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றாலும் நான் அவ்வாறு பணம் கொடுக்காததால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியல்ல, எதிரி பணத்தை கொடுத்துவிடுவதாக சொன்னதால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. 965034, 965035 ஆகிய இரண்டும் அந்த காசோலை எண்கள் ஆகும். என் புகார் மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் அந்த 2 காசோலைகளை எந்த தேதியில் எந்த வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்ற விபரம் இடம் பெறவில்லை என்றால் சரி. மேற்சொன்ன 2 காசோலைகளும் காலாவதியான காசோலைகள் என்றாலும் அதனால்தான் அவற்றை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அந்த காசோலை தொகைக்கு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் காலாவதியானதற்கு காரணம் எதிரி பணத்தை பின்னர் தருவதாக சொன்னதால்தான்.

ரூ.2 லட்சத்திற்கான காசோலை எண்.965057 ஆகும். என் வழக்கில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன் எதிரிக்கு விபரம் தெரிவித்துவிட்டு வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. நான் எதிரியிடம் 05.07.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்யவா எனக் கேட்டேன் எதிரி 10 நாட்கள் கழித்து தாக்கல் செய்யுமாறு சொன்னார். காசோலை திருப்பப்பட்டபின் நான் எதிரியை நேரடியாக சென்று பார்க்கவில்லை. நான் வேறு யார் மூலமாகவும் எதிரியை பணத்தை கொடுக்க சொல்லி கேட்கவில்லை. எதிரி என்னை நம்பி கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி நான் இந்த மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு மோசடி வழக்கு என்றாலும் எதிரி எனக்கு எந்த பணமும் கொடுக்க வேண்டியது இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி கையொப்பம் மட்டும் செய்து வெற்று காசோலையை மட்டும கொடுத்திருந்தார் என்றாலும் ஏனைய விபரங்களை நானே நிரப்பிக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிதான் காசோலையை எழுதிக் கொடுத்தார். காசோலையை கையெழுத்து நிபுணர் பரிசோதணைக்கு அனுப்பினால் அதில் எழுதியது எதிரி இல்லை என்ற விபரம் தெரியவரும் என்றால் அனுப்பலாம்.

நான் தேனி மாவட்ட குற்றபிரிவில் மொத்தம் ரூ.14 லட்ச தொகைக்கு மோசடி புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் அது நிலுவையில் உள்ளது என்றாலும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக அந்த விபரம் தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலை கூட்டு வங்கி கணக்கில் இருந்து வழங்கப்பட்டுள்ளதால் எதிரியின் மனைவியை கட்சி சேர்க்காததால் வழக்கு

தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. என் வழக்கு மோசடி வழக்கு என்பதால் எதிரி எனக்கு எந்த இழப்பீடும் தர அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.